**<u>கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்</u>**
**<u>மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்</u>**

**<u>MCOP No.8/2024</u>** 26-02-2026 **ம.சா.1**

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | செல்வராஜ் | தொழில் |
| க/பெ | குப்புசாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**<u>சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு</u>**
**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்தில் இறந்து போனவர் என்னுடைய தந்தை என்றால் சரிதான். அப்போது அவருக்கு வயது 74. விபத்து சமயத்தில் அவருக்கு இருசக்கர வாகன ஓட்டுவதற்கான ஓட்டுனர் உரிமம் இல்லை என்று சொன்னால் சரியல்ல இருந்தது. விபத்து சமயத்தில் அவர் தலைக்கவசம் அணியவில்லை என்று சொன்னால் சரியல்ல அணிந்திருந்தார். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து குறித்து சாட்சி மகாலிங்கம் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். விபத்து குறித்து நான் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். மகாலிங்கம் கூறிய விபரங்கள் அடிப்படையில் தான் நான் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரிதான். விபத்தின் போது என்னுடைய தகப்பனார் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்று கொண்டிருந்தார் என்றால் சரிதான். மேற்படி விபத்து மேற்கில் திரும்புவதற்காக நின்று கொண்டிருந்த போது விபத்து நடந்தது அவர் உரிய சைகை செய்யாமல் திடீரென்று மேற்கில் திரும்பியதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

1-ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த இருசக்கர வாகனம் என்னுடைய அப்பா ஓட்டிச் சென்ற வாகனத்தின் பின்புறமாக மோதி விட்டது என்று சொன்னால் சரியல்ல சைடில் இடித்து விட்டது. விபத்து சமயத்தில் என்னுடைய

தகப்பனாருக்கு வயது 74 என்பதால் அவருக்கு பார்வை குறைபாடு இருந்தது என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமகயத்தில் என்னுடைய அப்பா ஓட்டிவந்த வாகனத்திற்கு உரிய பதிவு சான்று இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய அப்பா பால்பண்ணை வைத்து வருமானம் ஈட்டினார் என்பதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய அப்பாவின் வருமானத்தை நாங்கள் யாரும் சார்ந்திருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்ட விபரங்கள் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என்னுடைய தகப்பனார்தான் இருசக்கர வாகனத்தை சரியாக ஓட்டி செல்லாமல் கவனக்குறைவாக ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல.1-ம் எதிர்மனுதாரரின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியில்லை.

**மேற்கண்ட குறுக்கு விசாரணையை 2-ம் எதிர்மனுதாரர் தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.26 19:47:36 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம் எண்.3, தாராபுரம்**
**மோட்டார் வாகன விபத்து உரிமைக்கோரிக்கை தீர்ப்பாயம், தாராபுரம்**

| | | |
|---|---|---|
| **MCOP No.8/2024** | 26-02-2026 | **ம.சா.2** |

சாட்சியின் சாட்சியம் திரு.C.M.சரவணன்,B.A.,L.L.M., கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி (மோ.வா.வி.உ.கோ.தீ) தாராபுரம் அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | மகாலிங்கம் | தொழில் |
| த/பெ | வேலுச்சாமி | கிராமம் |
| வயது | | தாலுகா |
| | | மாவட்டம் |

**முதல் விசாரணை**

சத்தியமாக சொல்கிறேன். நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2 வது சாட்சி. என்னுடைய பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும், அவற்றை தெரிந்து கொண்டு தான் நான் அதில் என் கையொப்பங்களை போட்டுள்ளேன்.

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இறந்துபோன குப்புசாமி எனக்கு 10 வருடங்களாக தெரியும் அவர் எனக்கு உறவினர். விபத்தை நான் பக்கத்தில் இருந்து தான் பார்த்தேன். மேற்படி விபத்தில் டிவிஎஸ் எக்ஸெல் வாகனம் முழுவதுமாக சேதம் அடைந்து விட்டது. லாரியில் என்ன சேதாரம் ஏற்பட்டிருந்தது என்று நான் பார்க்கவில்லை. காயம்பட்ட நபரை நான்தான் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மருத்துவரிடம் விபத்து நடந்த விபரத்தை நான்தான் சொன்னேன். போலீசார் விபத்து தொடர்பாக என்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள். நான் முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்ட சங்கதிகள் தவறானவை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து இறந்து போன குப்புசாமியின் கவனக்குறைவால் தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. விபத்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் இறந்து போன குப்புசாமி என்னுடைய உறவினர் என்பதால் அவர் ஆதரவாக நான் பொய்

சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மேற்கண்ட குறுக்கு விசாரணையை 2-ம் எதிர்மனுதாரர் தன்னுடைய தாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2026.02.26 19:47:49 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.